<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 539/2025</u>

<u>வழக்கு சாட்சி PW-5</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Friday of 17.07.2026.

**(எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்படவில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சங்கரன்கோவில் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் தென்காசி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 31.12.2020ம் தேதி, தலைமைக்காவலர் ஐசக்ராஜன் பதிவு செய்து வைத்திருந்த காவல் நிலைய குற்றஎண்.518/2021 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அதே தேதி, 07.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சந்திரன் மற்றும் மகேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகும். மேலும் சம்பவயிடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் உடைந்த கண்ணாடித்துண்டுகளை அன்றைய தினம்

08.45 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.5** ஆகும். பின்னர், சாட்சிகள் பரமசிவன், பத்மநாபன், முத்துராஜ், சந்திரன், மகேஷ் மற்றும் தலைமைக்காவலர் ஐசக்ராஜன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், அதே தேதியில் 11.00 மணியளவில் தென்காசி பழைய பேருந்து நிலையம் ஆட்டோ ஸ்டாண்ட் அருகே வைத்து எதிரி சுடலைமுத்து என்பவரை கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

சேதமடைந்த கண்ணாடித்துண்டுகளுக்கு சேதமதிப்பு சம்பந்தமாக செங்கோட்டை அரசு போக்குவரத்து கழக கிளை மேலாளர் சாகீர்உசைன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சேதமதிப்பு சான்று பெற்றேன். அந்த சேதமதிப்புச்சான்று **அ.சா.ஆ.6** ஆகும்.

மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கு பணிநியமனம் வழங்கிய போக்குவரத்து கட்டுப்பாட்டு பிரிவு அலுவலர் மாரிச்செல்வம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பணிநியமனச்சான்று பெற்றேன். (பணி நியமனச்சான்று நீதிமன்ற வழக்கு கோப்பில் இல்லை, மாரிச்செல்வம் சாட்சியாக சாட்சிப்பட்டியலில் இல்லை). உடைந்த கண்ணாடித் துண்டுகளை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.8** ஆகும். புகார்தாரர் நிலையத்தில் வைத்து விசாரணையின் போது கொடுத்த கல் ஒன்றை 31.12.2020ம் தேதி, 09.45

மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆகும். கல் – அ.சா.பொ.1 ஆகும். கண்ணாடித்துண்டுகள் அ.சா.பொ.2 ஆகும்.

01.02.2021 அன்று வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

சம்பவயிடம் தென்காசி காவல்நிலையத்திலிருந்து ஒரு கிமீ தூரம் தான் இருக்கும் என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 க்கு எதிரி சம்பவத்திற்கு முன்பே அறிமுகமான நபர் இல்லை என்றால் சரிதான். எதிரியை வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் கண்ணாடி உடைந்ததாக கூறவில்லை என்றாலும், கீறல் விழுந்ததாகத் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

எதிரி யாரென்று முதலில் அளிக்கப்பட்ட புகாரில் குறிப்பிடபடவில்லை என்றாலும், அந்த புகார் வழக்கில் மறைக்கப்பட்டு மறுநாள் எதிரியை நிலையத்தில் கைது செய்து வைத்து விட்டு அ.சா.1, அ.சா.2 டம் காவல்நிலையத்தில் வைத்து புகார் மனு தயார் செய்யப்பட்டது என்றாலும், அதனால் தான் எதிரியின் பெயர், விலாசம் புகாரில் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் முதல்தகவல்அறிக்கையும் தாமதமாக 31.12.2020 அன்று மாலை 03.45 மணிக்குத் தான் நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது என்றால் சரிதான்.

சேதமதிப்பு சான்றிதழ் உரிய அதிகாரியிடம் வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து புகார் மனு எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து சான்று பொருட்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றாலும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

சாட்சி சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில் அலுவலகம் காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. Karthika, Typist சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற அலுவலகம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.27 11:06:55 +0530